DEPOSITION OF WITNESS
(Chapter XXII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE CHIEF JUDICIAL MAGISTRATE,
KRISHNAGIRI.

| | | |
|---|---|---|
| Sessions | : | CC. No. 250 of 2022 |
| Deposition of witness for | : | PW12 |
| Name | : | கவிதா |
| Father's Name | : | நாகராஜ் |
| Village | : | K. திப்பனப்பள்ளி |
| Taluk | : | கிருஷ்ணகிரி |
| District | : | கிருஷ்ணகிரி |
| Profession | : | கூலி |
| Age | : | 42 |

Solemnly affirmed in accordance with the provisions of Act 44 of 1969 of the 24th day of April 2025.

எதிரி ஆஜர். சாட்சி ஆஜர். சாட்சி சத்திய பிரமாணத்தின் பெயரில் விசாரிக்கப்பட்டார்.

முதல் விசாரணை :–

நான் தற்போது K.திப்பனப்பள்ளி கிராமத்தில் குடியிருந்து வருகிறேன். தனியார் நிறுவனத்தில் மேற்பார்வையாளராக வேலை செய்து வருகிறேன். கடந்த 07.08.2020 ஆம் ஆண்டு இரவு சுமார் 07.00 மணி முதல் 07.30 மணிக்குள் நான் எனது வீட்டில் இருந்த போது என்னுடன் வேலை பார்க்கும் பெண்மணி ஒருவர் போன் செய்து ஜமுனா என்பவர் விபத்தில் இறந்ததாக போன் மூலம் தகவல் சொன்னார். தகவலின் பேரில் நான் குந்தாரப்பள்ளி கூட்டு ரோட்டிலிருந்து வேப்பனப்பள்ளி செல்லும் சாலையில் உள்ள தளவாய்பள்ளி அருகே சென்று பார்த்த போது, சம்பவ இடத்தில் ஒரு பெண்மணி இறந்து கிடந்தார். இரண்டு குழந்தைகளில் ஒரு குழந்தை இறந்து போயிருந்தது. மற்றொரு குழந்தை உயிருக்கு போராடி கொண்டிருந்தது. அருகில் இருந்தவர்கள் அந்த சமயத்தில் ஆம்புலன்சிற்கு தகவல் சொன்னதின் பெயரில் 108 ஆம்புலன்ஸ் மூலமாக கிருஷ்ணகிரி அரசு மருத்துவமனைக்கு அவர்களை அனுப்பி வைத்தோம். விபத்தில் இறந்து போன ஜமுனா ஸ்கூட்டி வாகனத்தில் சென்றிருள்ளார் என்ற விவரம் எனக்கு தெரியும். இவ்வழக்கு சம்பந்தமாக போலீசார் என்னை விசாரணை செய்தனர்.

எதிரி தரப்பு குறுக்கு விசாரணை :–

உங்கள் ஊர் K.திப்பனப்பள்ளிக்கும் விபத்து நடந்த பகுதிக்கும் எவ்வளவு தூரம் இருக்கும் என்றால் 3 கி.மீ. இருக்கும். யாருடைய அஜாக்கிரதையால் விபத்து ஏற்பட்டது என்பதை நீங்கள் நேரடியாக பார்க்கவில்லை என்றால் சரிதான். விபத்தில் இறந்து போன ஜமுனா என்பவருக்கு விபத்து சமயத்தில் என்ன வயதிருக்கும் என்றால் சுமார் 23 வயதிருக்கும். மற்ற இரண்டு குழந்தைகளும் சிறுவர்கள் என்றால் சரிதான். வண்டியை யார் ஓட்டிச் சென்றார்கள் என்று நீங்கள் நேரடியாக பார்க்கவில்லை என்றால் சரிதான். நீங்கள் சொன்ன நேரத்தில் சொன்ன இடத்தில் விபத்து ஏதும் ஏற்படவில்லை என்றால் சரியல்ல. ஜமுனாவும் நீங்களும் ஒன்றாக வேலை செய்தீர்கள் என்று சொல்வது தவறு என்றால் சரியல்ல. ஜமுனாவிற்கு வண்டி ஓட்டுவதற்கான உரிமம் கிடையாது என்றால் அவர் அந்த சமயத்தில் வண்டி ஓட்டிக் கொண்டு தான் இருந்தார். இறந்த ஜமுனா என்பவர் தான் அதிவேகமாகவும், அஜாக்கிரதையாகவும் ஓட்டி வந்து ஆஜர் எதிரி வாகனத்தின் மீது மோதி விபத்து ஏற்படுத்தினார் என்றால் சரியல்ல. ஆஜர் எதிரிக்கும் இவ்வழக்கிற்கும் சம்பந்தமில்லை என்றால் சரியல்ல.

மறு விசாரணை :–

இல்லை.

ஒம் /– திரு.இரா.கோகுலகிருஷ்ணன்,
தலைமை குற்றவியல் நீதித்துறை நடுவர்,
கிருஷ்ணகிரி.